முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி சார்பில் ஆவடி பேருந்து நிறுத்தம் பகுதியில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு நல உதவிகள் அறுசுவை உணவு வழங்கினார். உடன் மேயர் ஜி.உதயக்குமார், மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர் ஜி. நாராயண பிரசாத், பஷீர் அகமது, ஒ.ஆர்.நாகூர் கனி, உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

புதுக்கோட்டை நகருக்குள் செல்லும்

தஞ்சாவூர் - மானாமதுரை சாலையை நான்கு வழிச் சாலையாக தரம் உயர்த்திடுக!

சட்டப்பேரவையில் டாக்டர் வை.முத்து ராஜா வலியுறுத்தல்!

சென்னை, மார்ச்.19-

சட்டப்பேரவையில் புதுக்கோட்டை தொகுதி கழக உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா எழுப்பிய கேள்வியும் அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:

டாக்டர் வை. முத்துராஜா: புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து மாலையடி வரை உள்ள சாலை மிகவும் குறுகலாக உள்ளன. காலை மற்றும் மாலை நேரங்களில் பள்ளிக் கல்லூரி வாகனங்கள் அதிகமாக செல்வதால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுகிறது.

இதனால் நோயாளிகளை ஏற்றிச்செல்லும் ambulance மருத்துவமனைக்கு செல்ல காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படு

கின்றனர். இது பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. ஆகவே, புதுக்கோட்டை நகருக்குள் தஞ்சாவூர்-மானாமதுரை மாநில சாலையை அகலப்படுத்தி, நான்கு வழிச்சாலையாக தரம் உயர்த்தி, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ், மக்களின் நீண்டநாள் கோரிக்கையை விரைந்து செயல்படுத்தித்தர அமைச்சர் அவர்களை, கேட்டுக் கொள்கின்றேன்.

அமைச்சர் எ.வ.வேலு: நம்முடைய புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், சாலை குறித்து குறிப்பிட்டார்கள். போக்குவரத்தைப் பொறுத்தவரையில் அந்த சாலை கல்லூரிக்கு செல்கின்ற சாலை என்பதால், இந்த ஆண்டு அதனுடைய அகலத்தை எடுத்துக்கொள்ளலாம் என்பதை துறை சார்ந்த கோட்டப்பொறியாளருக்கு, நான் செய்திகளை அனுப்பி, அதற்கு வேண்டிய திட்ட மதிப்பீடுகளை தயார் செய்ய சொல்கிறேன். ஆனால், மாண்மிகு உறுப்பினர் நான்கு வழிச்சாலையாக அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள், நான்கு வழிச்சாலைக்கு பொதுவாக-இந்த ஆண்டு வந்தபிறகு தான் முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி, நான்கு வழிச் சாலைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதில் போக்குவரத்தின் செறிவு PCU எவ்வளவு இருக்கிறதோ அதன் அடிப்படையில்தான் நான்கு வழிச்சாலை அமைக்க முடியும். ஏனென்றால், போக்குவரத்து அதிகம் இல்லாத இடத்தில் நான்கு வழிச் சாலை அமைத்தோம் என்றால் நாளைக்கு Audit objection வந்துவிடும். அதனால் PCU இருக்கிறதா என்று நான் பார்க்கசொல்கிறேன், இருந்தால் நான்கு வழிச்சாலை, இல்லையென்றால் போக்குவரத்தை கணக்கெடுத்துக் கொண்டு, இந்த நிதியாண்டில் அந்தச் சாலையை விரிவுப்படுத்துவதற்கு அரசு முன்வரும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி, 113அ வட்டக் கழக செயலாளர் த.தேவராஜ் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 1072 நபர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா 14.3.2025 தர்மாபுரம் மெயின் ரோடு, மாதா கோயில் அருகில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு பங்கேற்று 1047 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி எழுச்சியுரையாற்றினார். நா.எழிலன்,எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் மா.பா. அன்புதுரை முன்னிலை வகித்தனர். உடன் தலைமைக்கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன், தலைமைக்கழக இளம் பேச்சாளர் பம்மல் வி.தினேஷ், வட்டக் கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

பூவிருந்தவல்லி தொகுதி

கீழானூர் துணை மின் நிலையம் தரமுயர்த்தப்படுமா?

சட்டப்பேரவையில் ஆ.கிருஷ்ணசாமி கேள்வி!

சென்னை, மார்ச் 19

பூவிருந்தவல்லி தொகுதி கீழானூரில் துணை மின் நிலையம் தரமுயர்த்தப்படுமா என்று பேரவையில் ஆ.கிருஷ்ணசாமி கேள்வி எழுப்பினார்.

இது குறித்த விவாதம் வருமாறு:-

ஆ. கிருஷ்ணசாமி: என்னுடைய தொகுதியில் கடந்த ஓராண்டு முன்னர் பட்டாபிராம் அருகிலிருக்கக்கூடிய சோராஞ்சேரியில் ஒரு புதிய துணை

மின் நிலையம் கட்டித்தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி வழங்கினார். அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, ஓராண்டு காலமாக கிடப்பில் இருக்கிறது. அங்கு துணை மின் நிலையமும், அதேநேரத்தில் திருவூரில் ஒரு துணை மின் நிலையமும், வள்ளியூர், விளாப்பாக்கம், கீழானூர் ஆகிய விவசாய நிலங்கள் அதிகமுள்ள பகுதிகளில் கீழானூர் துணை மின் நிலையம் ஒன்று தரமுயர்த்தி தர முடியுமா?

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: உறுப்பினர் அவர்கள் புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மூன்று இடங்களில் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த மூன்று இடங்களும் துறைக்கு அனுப்பப்பட்டு, ஆய்வு செய்யப்படும். தேவை ஏற்படின், முன்னுரிமை அடிப்படையில் அரசு பரிசீலிக்கும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

மயிலை கிழக்குப் பகுதி – 124வது வட்டக் கழக

நிர்வாகிகள் - பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் ஏ.தாஸ் அறிக்கை!

சென்னை, மார்ச்.19-

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர், மயிலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி அறிவுறுத்தல்படி 124வது வட்டச் செயலாளர் மயிலை ஏ.தாஸ் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் இன்று (19/03/2025 - புதன்கிழமை) மாலை 7.30 மணியளவில் வட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வட்டத்திற்குட்பட்ட மாவட்ட பிரதிநிதி, அணிகளின் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ,பகுதி அமைப்பாளர் ,துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பாகம் முகவர்கள் (BLA 2) அனைவரும் இந்த ஆலோசனை கூட்டத்திற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: சமூக வலைதளங்களில் நமது தகவல் தொழில்நுட்ப அணியுடன் இணைந்து எப்படி செயல்படுவது குறித்து ஆலோசிக்க உள்ளோம் மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு வட்டச் செயலாளர் மயிலை ஏ.தாஸ் அறிக்கை விடுத்துள்ளார்.

125வது வட்ட ஆலோசனைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் அ.தவநேசன் தலைமையில்!

சென்னை, மார்ச்.19-

தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 125வது வட்டத்தில் நமது மாவட்டம் நமது பகுதி தொகுதி பார்வையாளர் அறிவுறுத்தலுக்கிணங்க நாளை 20.03.2025 வியாழன் மாலை 7 மணியளவில் காரணீஸ்வரர் பகோடா தெரு சமூக நல கூடத்தில் வட்ட கழக செயலாளர் அ.தவநேசன் தலைமையில் மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விக்னேஸ்வரன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ஆர்.கதிரவன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் டி.ஜெகதிஸ்பாபு, வட்ட கழக நிர்வாகிகள் முன்னிலையில் பாக பொறுப்பாளர்கள், இளைஞர் அணி பாக பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

பூவை ப.ச.கமலேஷ் தலைமையில்– மோப்பூர் மு.இளையான் ஏற்பாட்டில்

திருவள்ளூர் மத்திய மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ சிறப்புரையாற்றினார்!

திருவள்ளூர் மார்ச் 19-

திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய ஒன்றியம் மேப்பூர் ஊராட்சியில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பில் தமிழ்நாட்டு முதல்வரும் கழகத் தலைவருமான மு.க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் ஆலோசனைப்படி மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட அமைப்பாளரும் மாவட்ட பிரதிநிதிவுமான மு.இளையான் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் பூந்தமல்லி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமை தங்கினார்

பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார் ஒன்றிய கழக நிர்வாகிகள் அண்ணாமலை, ஏ.ஜனார்த்தன், எஸ்.புகழேந்தி, ஏ.ஆர். பாஸ்கர், ஆர்.பிரபாகரன், பரிமேலழகன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

நிகழ்ச்சியில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமைக் கழக பேச்சாளர் பவானி கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு ஆயிரம் மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மார்ச் 1ஆம் தேதி பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்

மகளிர் குழுவிற்கு சார்ந்த 150 நபர்களுக்கு கிப்ட் பாக்ஸ் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சண்முகம், குமரேசன், வெங்கடேசன், கே.ஜி.ஆர் ஸ்டாலின், நாசா பாலா, கேசவன், திருமலை ராஜ், முனிரத்தினம், மற்றும் நிர்வாகிகள் எம். ஏழுமலை, மாரியப்பன், எஸ்.முரளி, அழகிரி, ஆறுமுகம், ஜோதிபாஸ்கர், லிங்கேஷ்குமார், பாலசுப்பிரமணியம், கவிதா, ராஜாமல்லிகா, ஆனந்தன், நித்தியலட்சுமி, விஷாலட்சுமி, மதியழகன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்கள்

குவைத் நாட்டில் –

கழக அயலக அணி சார்பில் இப்தார் நிகழ்ச்சி!

புதுக்கோட்டை பஷீர் தலைமையில்!

குவைத், மார்ச் 19-

குவைத் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அயலக அணி சார்பில் பாலிவுட் உணவகத்தில் கட்டுக்கடங்காத கூட்டத்துடன் கலந்து கொண்டு சிறப்பித்த மாபெரும் சமூக நல்லிணக்க இப்தார் நிகழ்ச்சி புதுக்கோட்டை பஷீர் அகமது தலைமையிலும்! பத்தமடை சிந்தா பக்கீர், ஆலங்குடி கார்த்திக், காட்டூர் ஆறுமுகம், வேலம்புதுக்குடி ஜியாவுதீன், முனசந்தை சிக்கந்தர், காரைக்குடி செந்தில்முருகன், பத்தமடை நாகூர் ஆகியோர்களின் முன்னிலையிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் தாயகத்திலிருந்து சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த மௌலவி ஷேக் அலி பிர் தௌசி கலந்து கொண்டு திராவிட மாடலின் நல்லாட்சியையும் ,சமூக நல்லிணக்கத்தையும், நோன்பின் மாண்பயையும், முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் சிறுபான்மையினருக்கு செய்த நலத்திட்ட உதவிகளை இஸ்லாமிய மார்க்க ரீதியாக முத்தாய்ப்பாய் எடுத்துரைத்தார் ..

கழக நிர்வாகத்தினர் புதுகை அருட்செல்வன் ,ஆலஞ்சியார், கறம்பக்குடி ஜாபர்சாதிக் ,புதுவை சபிக்கான், நாசர் சலாவுதீன்,பேராவூரணி ரபீக், மயிலாடுதுறை நாகேந்திரன், போரூர் பிரகாஷ், தளபதி பிரபு, சக்கந்தி தமிழ்ச்செல்வன், கொல்லாபுரம் ஜாகீர்,களந்தை மீரான், கொளத்தூர் கணேஷ், காட்டு பாவா, கார்த்திக் பாலா, திட்டச்சேரி சாகுல் ஹமீது, திருமல்லாபுரம் முத்து மருதையா, சிவகங்கை ஜாகிர் உசேன், ராமநாதபுரம் அஜீஸ், நெல்லை கருத்த பாண்டி, அஜித், கபிலன் ,தேரிழந்தூர் தவ்பிக், என ஏராளமான உடன் பிறப்புக்களுடனும் ...

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அன்பரசன், தளபதி பேரவை சரவணன்,தமிழக வாழ்வுரிமை கட்சி சாகுல், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் லத்தீப், தளபதி பேரவை ராஜா முகமது, மனிதநேய ஜனநாயக கட்சி சர்புதீன்,சமூக ஆர்வலர் ஸ்டீபன் ரொசாரியோ, பாலிவுட் உணவகம் சீனிவாசன், உதவும் கரங்கள் மஜீத், ஓட்டுனர் சேவை மையம் செய்யது இமாம் ஜாஃபர், மக்கள் சேவை மையம் அலிபாய், கலகலப்பு நண்பர்கள் சரவணன், புகைப்பட கலைஞர் பக்ருதீன், போன்ற கூட்டணி கட்சியினரும் தமிழ் பொதுநல சேவை அமைப்பினரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

குவைத் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அயலக அணி சார்பில் பாலிவுட் உணவகத்தில் கட்டுக்கடங்காத கூட்டத்துடன் கலந்து கொண்டு சிறப்பித்த மாபெரும் சமூக நல்லிணக்க இப்தார் நிகழ்ச்சி புதுக்கோட்டை பஷீர் அகமது தலைமையிலும் பத்தமடை சிந்தா பக்கீர், ஆலங்குடி கார்த்திக், காட்டூர் ஆறுமுகம், வேலம்புதுக்குடி ஜியாவுதீன், முனசந்தை சிக்கந்தர், காரைக்குடி செந்தில்முருகன், பத்தமடை நாகூர் ஆகியோர்களின் முன்னிலையிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மணலி புது நகர் திட்டப் பகுதியில்

பட்டா பெற இன்று முதல் விண்ணப்பிக்கலாம்!

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அறிவிப்பு!

சென்னை,மார்ச்.19-

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை மாநகரம், மணலி புது நகர் திட்டப்பகுதியில் உள்ள பகுதி-1, பகுதி-2 மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஆகியவற்றால் மனைகள், வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளை உருவாக்கி பொது மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவ்வாறு ஒதுக்கீடு பெற்று முழுத் தொகையையும் செலுத்திய ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனை பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து, தமிழக அரசின் மேலான உத்தரவிற்கு இணங்க மணலி புதுநகர் திட்டப்பகுதியில் உள்ள ஒதுக்கீடுதாரர்களுக்கு வருவாய் துறையிடமிருந்து நில உரிமை ஆவணம் (பட்டா) பெறுவதற்கு சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றின் ஒதுக்கீடுதாரர்கள் இச்சிறப்பு முன் முயற்சியை பயன்படுத்தி தாங்கள் வீட்டு வசதி வாரியத்திடமிருந்து மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து வாங்கிய சொத்திற்கு நில உரிமை ஆவணம் (பட்டா) பெறுவதற்கு ஏதுவாக தாங்கள் விற்பனை பத்திரங்கள் மற்றும் இதர ஆவணங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் வருவாய் துறை சார்பாக சிறுவர் மாநகராட்சி பூங்கா, மணலி பகுதி-2ல் 19.3.2025, 20.3.2025 மற்றும் 21.3.2025 ஆகிய நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 வரையில் நடத்தப்படும் சிறப்பு முகாமில் ஆவணங்களின் நகலினை ஒப்படைத்து பட்டா பெறுவதற்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு ஒதுக்கீடுதாரர்கள் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ஏற்கனவே மேற்காணும் திட்டப்பகுதியில் பட்டா பெறுவதற்கு ஏற்கனவே விண்ணப்பம் அளித்திருந்தால் மீண்டும் விண்ணப்பம் அளிக்க வேண்டாம் எனவும் ஒதுக்கீடுதார்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று வீட்டு வசதி வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

சென்னை, தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் கோ. வி. லெனின் ஆகியோர்களின் ஆலோசனையின்படி சமூக வலைதள செயல்பாடுகளில் BLA 2, BLC மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் ஆகியோர்களின் குறித்து ஆலோசனை மற்றும் பயிற்சி கூட்டம் ஆழ்வார்பேட்டை தெருவில் உள்ள வட்ட கழக அலுவலகத்தில், வட்ட செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., தகவல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட அமைப்பாளர் ஆர்.கதிரவன், மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணியின் அமைப்பாளர் வி.கார்த்திக், மயிலை மேற்கு பகுதி அமைப்பாளர் டி.லோகேஸ்வரன், ஆகியோர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்திற்கு 122வது வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி பிரதிநிதிகள் மற்றும் பாக முகவர்கள்(BLA2) கலந்து கொண்டனர்.